செ.வெ.எண்.60 நாள் : 21.11.2017

# பத்திரிகைசெய்தி

தாட்கோ மூலம் ஆதிதிராவிடர்களுக்காகசெயல்படுத்தப்படும் கீழ்க்கண்ட பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்குதகுதியும் விருப்பமும் உள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து இணையதளம் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. வயதுவரம்பு 18 முதல் 65 வரை.இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புதிட்டத்திற்குமட்டும் வயதுவரம்பு18 முதல்45வரை .குடும்ப ஆண்டு வருமானஉச்சவரம்பு ரூ.1.00 இலட்சம் ஆகும்.

1. அ) மகளிர் வேளாண் நிலம் வாங்கும் திட்டம் ஆ) நிலம் மேம்பாட்டுத் திட்டம் – (இருபாலருக்கும்) இ) துரித மின் இணைப்புதிட்டம் 2. தொழில்முனைவோர் திட்டம் அ) பெட்ரோல், டீசல்எரிவாயுசில்லரைவிற்பனைநிலையம் அமைத்தல் ஆ) தொழில்முனைவோர் திட்டம் 3 அ) இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டம் ஆ)மருத்துவமையம், மருந்தியல், கண் கண்ணாடியகம், முடநீக்கமையம், இரத்தபரிசோதனை நிலையம் அமைத்தல் மற்றும் மேம்படுத்தல் 4 அ) சுய உதவிக்குழுக்களுக்கான சுழல்நிதி ஆ) சுய உதவிக்குழுக்களுக்கான பொருளாதார கடனுதவி மானியத் திட்டதொகையில் 50 % 5) மாவட்டஆட்சியரின் விருப்புரிமை நிதி திட்டம் 6) மேலாண்மை இயக்குநர் விருப்புரிமை ட்டம் 7) தாட்கோ தலைவர் விருப்புரிமைநிதி 8) இந்தியகுடிமைப்பணி முதன்மை தேர்வு எழுதுவோருக்கு நிதியுதவி 9) சட்டபட்டதாரிகளுக்கு நிதியுதவி 10) தமிழ்நாடு தேர்வாணைய தொகுதி–I முதல் நிலைதேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு நிதியுதவி 11)பட்டயக்கணக்கர் – செலவுகணக்கர் – நிறுவன செயலர்களுக்கு நிதியுதவி 12) தொழில் தையல்கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி

தாட்கோதிட்டத்தில்பயன்பெறவிரும்புபவர்கள்http://application.tahdco.comஎன்ற இணையதள முகவரி மூலமாக விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பத்தினை படியிறக்கம் செய்தோ– நகலினையோகைப்பிரதி விண்ணப்பங்களையோ சமர்ப்பிக்கவேண்டியதில்லை. விண்ணப்பிக்கும் போது 1.விண்ணப்பதாரர்களின் முழுவிபரங்கள் 2. புகைப்படம் 3.இருப்பிடச்சான்றிதழ் எண் 4.சாதி சான்றிதழ் எண் (எண், வழங்கப்பட்ட நாள், வழங்கியவர் மற்றும் வழங்கப்பட்ட அலுவலகம்) 5. குடும்பவருமானச் சான்றிதழ் எண் (எண்.வழங்கப்பட்ட நாள் உட்பட வழங்கப்படுவதற்கான காரணம், நேர்காணல் நடத்தப்படும் தேதிக்கு 1 1/2ஆண்டுகள்முன்புவரைவருமானச் சான்றுபெற்றிருக்கலாம் அதாவது வருமானசான்றின் வயது1 1/2ஆண்டுகள்வரைஇருக்கலாம்) 6. பட்டாசிட்டா (நிலம் வாங்குதல்மற்றும் நிலம் மேம்பாட்டுதிட்டம்) 7.ஆதார் எண் 8. விண்ணப்பதாரரின் தொலைபேசி–கைபேசி எண் 9. விண்ணப்பதாரரின் மின்னஞ்சல்முகவரி(e mail address)

விண்ணப்பதாரர்கள் இணையதளம் மூலம் விண்ணப்பங்கள் பெறுவதற்கு அறிவிக்கப்பட்ட நாட்களில் 24 மணிநேரமும் பதிவு செய்யலாம். மேலும் விண்ணப்பங்களை அந்தந்த மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் மட்டும் பதிவு செய்யலாம். இதற்கான விண்ணப்பம் ஒன்றிற்கு பயனாளியிடமிருந்து ரூ.20/– வசூல் செய்யப்படும். இத்தொகையில் விண்ணப்பங்களை பதிவுசெய்வதற்காக, பணிஅமர்த்தப்படும் தாட்கோ மூலம் பயிற்சிபெற்றகணினி இயக்குபவருக்கு ரூ.10/– உம், மீதமுள்ள தொகை புகைப்படம் மற்றும் இதர ஆவணங்களை ஸ்கேன் (scan) செய்து பதிவேற்றம் செய்வதற்காகவும் பயன்படுத்தப்படும். இத்தொகைக்கான கணக்கு பதிவேடு மாவட்ட அலுவலகத்தில் தனியாக பராமரிக்கப்படவேண்டும். விண்ணப்பம் பதிவேற்றம் செய்யப்பட்டவுடன் ஒப்புகைரசீது விண்ணப்பதாரருக்கு வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்டுள்ளபடி தகுதி வாய்ந்த இந்து ஆதிதிராவிட இனத்தை சார்ந்தவர்கள் ஆன்லைன் மூலம் விண்ணப்பித்து பயன்பெறலாம் என கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.கு.கோவிந்தராஜ் இ.ஆ.ப.,**தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கரூர்.**